## பகுதி-1: வழிபாட்டு வழிகாட்டி

| | |
|---|---|
| 04.09.2016 | ஆண்டின் பொதுக்காலம் 23ம் ஞாயிறு - திருப்பலி |
| 05-09-2016 | புனித அன்னை தெரேசா - திருப்பலி |
| 08.09.2016 | தூய கன்னிமரியாவின் பிறப்பு திருவிழா - திருப்பலி |
| 11.09.2016 | ஆண்டின் பொதுக்காலம் 24ம் ஞாயிறு - திருப்பலி |
| 14.09.2016 | திருச்சிலுவையின் மகிமை திருவிழா - திருப்பலி |
| 15.09.2016 | வியாகுல அன்னை நினைவு - திருப்பலி |
| 17.09.2016 | தூய இராபர்ட் பெல்லார்மின் - திருப்பலி |
| 18.09.2016 | ஆண்டின் பொதுக்காலம் 25ம் ஞாயிறு - திருப்பலி |
| 21.09.2016 | தூய மத்தேயு - திருப்பலி |
| 25.09.2016 | ஆண்டின் பொதுக்காலம் 26ம் ஞாயிறு - திருப்பலி |
| 27.09.2016 | தூய வின்செனட் தெ பவுல் - திருப்பலி |
| 29.09.2016 | முப்பெரும் அதிதூதர்கள் திருவிழா - திருப்பலி |
| 30.09.2016 | தூய எரோணிமுசு / ஜெரோம் - திருப்பலி |

## பகுதி-2: விசுவாசத்தில் வளர...

1. அன்னை தெரேசா: புனிதையாகும் தேவதை
2. தந்தை பியோ - இரக்கத்தில் புனித வாழ்வு
3. தந்தை பியோ - புதுமைகளும் அருஞ்செயல்களும்
4. திருச்சபை செய்திகள்

**04.09.2016 ஆண்டின் பொதுக்காலம் 23ம் ஞாயிறு திருப்பலி**

திருமதி. ராணி சம்பந்தன்

**முன்னுரை**

இறையன்பில் வாழும் இனிய மக்களே, நிலையற்ற நம் எண்ணங்கள் தவறக் கூடியவை. ஆனால் நமதாண்டவர் இயேசுகிறிஸ்து தூய ஆவியானவரை அனுப்பி நம் திட்டங்களை நிறைவேற செய்கிறார். மேலும் "தம் சிலுவையை சுமக்காமல், என் பின் வருபவர் எனக்கு சீடராய் இருக்க முடியாது" என்றும் "உங்களுள் தன் உடைமைகளையெல்லாம் விட்டுவிடாத எவரும் என் சீடராய் இருக்க முடியாது" என்றும் கூறுகிறார். இன்றைய வாசகங்கள் அனைத்தும் இயேசுவின் உண்மையான சீடர் யாராக இருக்க முடியும் என்பதையே சுட்டிக்காட்டுகிறது. ஞானத்தோடு இயேசுவின் வழிவாழ்ந்து அதன் பயனை அனுபவிக்க சிந்தித்து செயல்பட அழைக்கிறது இன்றைய இறைவார்த்தை. இக்கருத்தை மனதில் கொண்டு இப்பலியில் இணைவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. ஒருங்கிணைக்கும் இறைவா, எம் ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவின் பிரதிநிதிகளான திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் அன்புறவுடன் ஒரே குடும்பமாக சிறப்போடு வாழும் வரத்தை பிறமத சகோதரர்களும் உணர்ந்து அன்புடன் இணைய வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
2. பாதுகாப்பளிக்கும் இறைவா, குடும்பங்களில் அன்றாடம் நடக்கும் சண்டை, சச்சரவுகளினால் வளரும் பிள்ளைகளின் மனதில் கசப்புணர்வுகள் அதிகரித்து தடுமாறும் நிலையை நீர் போக்கி பாதுகாத்து வழிநடத்த வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
3. நீதியின் தேவனே இறைவா, பாவம் ஒரு புறம், பழி ஒரு புறம் என்ற நிலைவராமல் செய்யாத குற்றத்திற்காக குற்றவாளிகளாக நிறுத்தப்படும் நல்லவர்களுக்கு நீதியைத் தர வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
4. நன்மைகளின் ஊற்றே இறைவா, நீர் படைத்த மக்கள் நன்றாக வாழ வேண்டும் என்பதற்காக நல்ல பல வளங்களை தந்திருக்கும் உமது நன்மைகளை உணர்ந்து அவற்றை பாதுகாத்து எல்லா வளங்களும் பன்மடங்கு பெருகி வளம் கொழிக்கும் நாடாக நாங்கள் விளங்கிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**05-09-2016 புனித அன்னை தெரேசா திருப்பலி**

திரு. ஜான் அலெக்சாண்டர்

**முன்னுரை**

அன்புக்குரியவர்களே, இன்றைய நாள் மிக சிறப்பானதொரு நாள். நேற்று அருளாளர் அன்னை தெரேசாவிற்கு புனிதர் பட்டம் வழங்கப்பட்டு இன்று நாம் அவருடைய விழாவை கொண்டாடுகிறோம். அன்னை தெரசா நம் காலத்து புனிதை, நம்மோடு வாழ்ந்து நம் நாட்டின் மீது தனிப்பற்று கொண்டு இயேசுவின் பணியான "ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிப்பதை" தன் வாழ்க்கையில் வாழ்ந்துக் காட்டிய புனிதை என்றும் கூறலாம். தனது 18ம் வயதில் இந்தியாவிற்கு வந்து தனது பிறரன்பு பணியை சிறப்பாக செய்து வந்தவர் என்பது நமக்கு தெரியும். அவர் அடிக்கடி சொன்ன வார்த்தைகள், "வழிபாடு செய்யுங்கள்... கடவுளுக்கு அருகில் நீங்கள் செல்லலாம்... சேவை செய்யுங்கள்... கடவுள் உங்கள் அருகில் வருவார்". பல சூழல்களில் நாம் சேவை செய்ய வேண்டிய நேரங்களில் சாக்கு போக்குகளை சொல்லி தப்பித்துக் கொள்ளவே நினைக்கின்றோம். இதோ இன்றைய வாசகங்கள் நமக்கு பதில் தருகின்றன. ஓய்வு நாளில் நன்மை செய்வதா? தீமை செய்வதா? என்ற இயேசுவின் இந்த கேள்விக்கு சமூகத்தின் தலைவர்களால் பதில் சொல்ல முடியவில்லை. ஓய்வு நாள் கூட்டம் உட்பட அனைத்து சடங்குகளும் மனித நலனுக்காகவே அமைக்கப்பட்டுள்ளன. இதை மனதில் இருத்தி மனித நேயம் புதுமலர்ச்சி பெற வேண்டுமென்று தொடர்ந்து இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. ஞானத்தின் ஊற்றாகிய இறைவா, நாங்கள் மீட்படைய உமது கொடையாகிய பரிசுத்த ஆவியையும் ஞானத்தையும் நிறைவாக தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. எல்லா உறவுகளுக்கும் உயிர்களுக்கும் அதிபதியாக இருந்து காப்பவர் நீரே, என்பதனைக் கண்டுணர்ந்து உம்மையே நாங்கள் அனைத்துக்கும் மேலாக அன்பு செய்யும் அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. இயேசுவின்மீது கொண்ட விசுவாசத்தினால் இன, இட, நிலை, பால் வேறுபாடுகளைக் கடந்து இறைமக்களாகியுள்ள நாங்கள் அனைவரும் இறைவனின் உன்னதக் கொடையான ஒற்றுமையையும் சமாதானத்தையும் அனுபவிக்க அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. எங்கள் பங்குத் திருச்சபையில் உள்ள ஏழை, அநாதைகள், நோயுற்றோர், கைவிடப்பட்டோர் ஆகியோர்களுக்கு உமது இரக்கத்தையும், கருணையையும் வெளிப்படுத்தும் அன்புக் கருவிகளாக நாங்கள் வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

5. துன்பமும் இன்பமும் கலந்ததுதான் வாழ்க்கை என்ற வாழ்வியல் கலையை அன்னை தெரேசா எமக்கு கற்றுத்தந்துள்ளார் அதை வாழ்வாக்கியும் காட்டியுள்ளார். அவரைப் போல் நாங்களும் துன்பத்தைத் தாங்குவதன் மூலமாக அதையும் இன்பமாக மாற்றும் அருள்பெற்று வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**08.09.2016 தூய கன்னிமரியாவின் பிறப்பு திருவிழா திருப்பலி**

திரு. ஹென்றி ஸ்டீபன்

**முன்னுரை**

**"கருப்பையினின்று நீ வெளிப்படும் முன்பே உன்னை நான் தேர்ந்தெடுத்தேன்"**

நம் தாய் திருச்சபை இன்று அன்னை மரியாவின் பிறந்த நாள் விழாவை மிகச்சிறப்பாக கொண்டாடுகிறது. தூய மரியாவின் பிறப்பு மத இன மொழிகளைக் கடந்து கோடான கோடி பக்தர்கள் கொண்டாடும் ஒரு பெருவிழா. இதனை தமிழகத்தில் அன்னை வேளாங்கண்ணி, தூய ஆரோக்கிய அன்னை விழா என்றும் கொண்டாடுகிறோம். "மரியா எல்லாம் வல்ல இறைவனின் சொல்லற்கரிய புதுமை" என்கிறார் திருத்தந்தை 9ம் பத்திநாதர். தூய அகுஸ்தினார் மரியாவை ஏவாளுடன் ஒப்பிட்டு ஏவாள் கொண்டு வந்தது தண்டனை, மரியா கொண்டு வந்தது மனித குல மீட்பு. சாவின் தொடக்கம் ஏவாள், வாழ்வின் தொடக்கம் மரியா என்று கூறுகிறார். நம் ஒவ்வொருவரையும் படைத்த இறைவன் நமக்கென ஒரு திட்டம் வைத்துள்ளார் என்ற நம்பிக்கையோடு இத்திருப்பலியில் இறை சித்தம் நாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. காலங்களை கடந்த இறைவா, எம் திருஅவையை வழிநடத்தும் தலைவர்களை ஆசீர்வதியும். தூய கன்னி மரியா "ஆகட்டும்" என்று ஏற்றுக்கொண்டு அதில் நிலைத்து வாழ்ந்ததுபோல் இவர்களும் தங்களின் அழைப்பின் மேன்மையை உணர்ந்து தூய உள்ளத்தோடு இறைதூதுவர்களாக வாழ வேண்டிய அருளைத் தரவேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

2. சமாதானத்தின் இறைவா, நற்செய்தியின் மதிப்பீடுகளான நீதி, அன்பு, உண்மை, நேர்மை, பிறரன்பு போன்றவற்றை எம் நாட்டு தலைவர்கள் உணர்ந்து மக்களை நல்வழி நடத்திச் செல்ல தேவையான அருளைத்தர உம்மை மன்றாடுகிறோம்.

3. வாழ்வும் வழியுமான இறைவா, தூய கன்னிமரியாவின் பிறப்பு பெண்குலத்திற்கு பெருமை சேர்த்ததோடு மட்டுமல்லாமல் பெண்களின் வாழ்வுக்கு எடுத்துக்காட்டான முன்மாதிரியான வாழ்வு வாழ்ந்ததை பின்பற்றி பெண்மையை பாதுகாத்து ஆண் பெண் வேற்றுமையற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்க அருள்தர வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

4. ஒளி விளக்கே இறைவா, தூய கன்னி மரியாவின் தாழ்ச்சி, பொறுமை, கற்பு, சாந்தம், கீழ்ப்படிதல் போன்ற புண்ணியங்களை இன்றைய இளைஞர், இளம்பெண்கள் தங்கள் வாழ்க்கையில் ஏற்று இறைவாக்குரைக்கும் பணிக்காக தங்களையே அர்ப்பணித்து நல்மனத்தோராய் வாழ உமது அருளை பொழிந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

5. இரக்கத்தின் இறைவா, எம் பங்கிலும், எங்களைச் சூழ்ந்துள்ளோர், அருகிலுள்ளோர், ஏழை, எளியவர்மீதும் இரக்கம் கொண்டு வாழ்வின் முன்னேற்றத்திற்கு தடையாக உள்ளவற்றை நீக்கி அன்பும், அமைதியும், வளமான வாழ்வும் பெற்று உம்மீது திடமான விசுவாசம் கொண்டு சாட்சிய வாழ்வு வாழ உமது அருளைத்தர உம்மை மன்றாடுகிறோம்.

## 11.09.2016 ஆண்டின் பொதுக்காலம் 24ம் ஞாயிறு திருப்பலி

திருமதி. ராணி வில்சன்

**முன்னுரை**

"மன்னிப்பு கொடுப்பவர் மகிழ்கின்றார், மன்னிப்பு பெறுபவர் மகிழ்கிறார்"

அன்பு கரங்களை உயர்த்தி இறைவனின் அரவணைப்பில் இணைய இத்திருவழிபாட்டிற்கு அனைவரையும் அழைக்கின்றோம். மன்னிப்பு எத்துனை உன்னதமான வார்த்தை. இதுவே இன்றைய திருவழிபாட்டின் மையமாக அமைகிறது. இந்த அவசரமான கால கட்டத்தில் இயந்திரத் தரமான வாழ்க்கையில் இன்று நமக்கு மன்னிப்பு எனும் செயல் ஏராளமாக தேவைப்படுகிறது. அதுமட்டுமல்ல மன்னிப்போடு அன்பும் நம்பிக்கையும் தேவைப்படுகிறது. நாம் பிறரை மன்னித்தாலும் அதோடு விட்டுவிடாமல் அவர்கள்மீது நமது நம்பிக்கையை வைத்து அவர்களை தொடர்ந்து அன்பு செய்து பொறுப்புள்ளவர்களாக மாற்ற முயற்சி செய்ய வேண்டும்.

பல்வேறு பணித்தளங்களில் பணிபுரியும் பணியாளர்களை, உங்களிடம் மனம்மாறி மன்னிப்பு கேட்டு வரும் நபர்களை ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறோமா என நம்மை சுயஆய்வு செய்து இந்த வரத்திற்காக இணைந்து மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, மன்னிப்பு எனும் வரம் உம்மோடு ஒப்புரவாகும் வரம். அதை வழங்கும் எம் திருஅவையின் தலைவர்கள் அனைவரையும் உம் கரத்தில் ஒப்புக்கொடுக்கிறோம். மன்னிப்பு கொடுப்பது மட்டுமல்ல, நம்பிக்கையும், அன்பும் செலுத்தி பொறுப்புக்களைக் கொடுத்து அனைவரையும் அரவணைத்துச் செல்லும் வரங்களை அவர்கள்மேல் பொழிந்து அசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பு இறைவா, எங்கள் இந்திய நாட்டிலும் தமிழகத்திலும் சகிப்புத்தன்மை எனும் மன்னிக்கும் வரம் குறைந்து பழிவாங்கும் போக்கு அதிகரித்துள்ளது. இதனால் நாட்டில் பல அநீதிகள் பெருகி வருகிறது. சகிப்புத்தன்மை எனும் வரத்தை எங்கள் அனைவரின் மேலும் ஊற்றிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. இரக்கமே உருவான இறைவா, அனைத்து அரசு அலுவலகங்களில் பணிபுரியும் பணியாளர்களும் தங்கள் மக்களுக்கு சேவை புரியவே உள்ளோம் என்பதை உணர்ந்து பொறுமையுள்ளம் கொண்டு மக்களுக்கு தேவையான உதவிகளைச் செய்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. மனித நேயத்தை எடுத்துரைத்த இறைவா, மக்கள் அனைவரின் உள்ளங்களிலும் மனித நேயம் ஓங்கி வளர்ந்து அனைத்து மனித மாண்புகளையும் காத்து, மன்னிக்கும் மனம் கொண்டு வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 14.09.2016 திருச்சிலுவையின் மகிமை திருவிழா திருப்பலி

திரு. விக்டர்

**முன்னுரை**

அன்பார்ந்தவர்களே, நம் ஆண்டவரின் சிலுவை மரணம் ஒரு வரலாற்று நிகழ்வு ஆகும். இயேசு அறையுண்ட சிலுவை மரத்தைக் கண்டெடுத்து பத்திரப்படுத்த வேண்டும் என்கிற தேவை தொடக்க திருத்தூதர்கள் நாட்களில் இல்லாதிருந்தது, அது முடியாத செயலாயும் இருந்தது.

ஆனால் முதன் முதலாக கான்ஸ்டன்டைன் என்கிற உரோமை அரசன் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய பிறகு அவரது உத்தரவின் பேரில் தனது 80 வயது தாயார் தூய ஹெலன் அவரது மேற்பார்வையில் எருசலேமில் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு பல சிலுவைகள் கண்டெடுக்கப்பட்டன. அதில் ஒரு சிலுவையைத் தொட்ட ஒரு நோயாளி சுகமடைந்ததைக் கண்ட ஆராய்ச்சியாளர்கள் அதுதான் இயேசு அறையுண்ட திருச்சிலுவை என்று அறிந்து அதைப் பத்திரப்படுத்தினர். இது நடந்தது கி.பி. 328ல் இதுதான் திருச்சிலுவை கண்டெடுக்கப்பட்ட சுருக்கமான வரலாறு. இயேசு மரிப்பதற்கு முன்பு வரை அவமானத்தின் அடையாளமாக கருதப்பட்ட சிலுவை இயேசு அதிலே மரித்த பிறகு மீட்பின் அடையாளமாக, உயிர்த்தெழுந்த இயேசுவின் வெற்றிச்சின்னமாக மாறியது.

நம் வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் சிலுவை அடையாளம் வரைந்தே துவங்குகிறோம். இந்த சிலுவையில் நம்முடைய பாவங்களை அறைந்து விட்டால் நாம் இயேசுவோடு வாழலாம். (கலா. 2:20)

அப்படி அறையாதவர்கள் இயேசுவை மறுபடியும் சிலுவையில் அறைவதாக (எபி. 6:6) திருவிவிலியம் கூறுகிறது. இந்த நினைவுகளோடு இன்றைய திருப்பலியில் பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. உம்முடைய தழும்புகளால் என்னை குணமாக்கிய இயேசுவே, இத்திருப்பலியில் பங்கெடுத்துள்ள ஒவ்வொருவரையும் ஆசீர்வதியும். எங்களுடைய குற்றங்களை, குறைகளை, பாவங்களை உம்மோடு சிலுவையில் அறைந்துவிட்டோம், மரித்து உயிர்த்த உம்மோடு நாங்களும் உயர்ந்தவர்களாய் புதுவாழ்வு வாழ வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. திருச்சிலுவையை வெற்றியின் சின்னமாக வழங்கிய இயேசுவே, சாபமாக இருந்த சிலுவையை ஆசீர்வாதமாக மாற்றியதுபோல எம் வாழ்விலும் நாங்கள் சந்திக்கும் துன்பங்களிலும், வியாதிகளிலும், கஷ்டங்களிலும், நஷ்டங்களிலும், வேதனைகளிலும், வருத்தங்களிலும் எமக்கு ஆறுதலாய் இருந்து வெற்றி வாழ்வு வாழ வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. திருச்சிலுவை வழி எமை மீட்டவரே இறைவா, உம்மை விசுவசிக்கும் யாவரும் அழியாமல், இறையாட்சியில் நித்திய வாழ்வை அடைவதற்காக எமக்காக மரித்து உமது இரக்கத்தைக் காட்டினீர் அந்த இரக்கத்தின் பார்வையினால் நாங்கள் நலமும் வளமும் பெற்று இறையாட்சிக்கு ஏற்றவர்களாய் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

**15.09.2016 வியாகுல அன்னை நினைவு திருப்பலி**

திருமதி. பத்மாவதி

**முன்னுரை**

12ம் நூற்றாண்டு முதலாகவே வியாகுல அன்னை மீதான பக்தி மக்களின் உள்ளங்களில் வளர ஆரம்பித்தது. அன்னைக்கான இவ்வணக்கம் சிஸ்டர்சியன் மற்றும் வியாகுல அன்னை அதாவது இன்றைய மரியின் ஊழியர் சபையினரால் 14 மற்றும் 15ம் நூற்றாண்டுகளில் உலகம் முழுவதும் முன்னெடுத்து செல்லப்பட்டது. 1667ம் ஆண்டுதான் மரியின் ஊழியர் சபையினர் இவ்விழாவை கொண்டாட வத்திக்கான் அனுமதி அளித்தது.

அன்னையின் வியாகுலமென்பது இயேசு சிலுவையில் அறைப்பட்டபோது அருகிலிருந்த அன்னை மரியா துடித்துடித்ததையே வலியுறுத்தியது. ஆனால் 17ம் நூற்றாண்டு முதலாக அன்னையின் இருதயத்தை ஊடுருவிய ஏழுவாள்களை இந்த வியாகுலம் குறித்துக் காட்டுகிறது.

- சிமியோன் உரைத்த வாக்கு
- மரியா தன் குழந்தையைத் தூக்கிக்கொண்டு எகிப்து நோக்கி பயணம் செய்தது
- எருசலேம் ஆலயத்தில் இயேசு காணாமல் போனது
- சிலுவையின் பாதையில் இயேசுவை சந்தித்தது
- இயேசு சிலுவையில் அறையப்பட்டு இறந்தது
- இயேசுவின் விலாவில் ஈட்டியால் குத்தியது
- இயேசு கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது

வியாகுல அன்னை திருவிழாவை நினைவு கூறும் நாமும் இத்திருப்பலியில் பங்கேற்று இயேசுவைப்போல் கீழ்ப்படிதலுடன் வாழ்ந்து அன்னையின் துயரை குறைப்போம், வியாகுல அன்னையின் சபைக்காக இந்நேரத்தில் பக்தியோடு திருப்பலியில் பங்கெடுத்து அவர்களுக்காக செபிப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. இறைவார்த்தையின் தந்தையே, உமது திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், இருபால் துறவறத்தார் அனைவரையும் அன்பிலும், அமைதியிலும், ஒற்றுமையிலும் தங்கள் அழைத்தலின் மேன்மையை உணர்ந்து மகிழ்வுடனும், ஆர்வத்துடனும் தியாக உள்ளத்துடனும் செயல்பட வேண்டிய அருள்தர வியாகுல அன்னை வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. மனிதரை உம் சாயலாக படைத்த இறைவா, உம் திருமகன் இயேசு சாவிலிருந்து காப்பாற்ற வல்லவராம் உம்மை நோக்கி கண்ணீர் சிந்தி மன்றாடினார். நீரும் அவரது இறைப்பற்றுக் கலந்த அச்சத்தை முன்னிட்டு அவருக்கு செவி சாய்த்தீர். எங்களையும் சாவிலிருந்து காத்து எமக்கு நல்ல மீட்பை தரும்படி உம்மை மன்றாடுகிறோம்.

3. துன்பங்களின் வழியாக வெற்றிக்கொண்ட இறைவா, துன்பங்கள் வழியாகவே மனம் பக்குவப்படும், மற்றவர்களின் துயரம் உணர முடியும் என்பதை அறிந்தோர், வாழ்வில் இனிமை காண்பர் என்பதற்கிணங்க எம்மை எதிர்கொள்ளும் எல்லா தீமைகளையும், சோதனைகளையும் வென்று உமது சீடர்களாய் வாழ வியாகுல அன்னை வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

**17.09.2016 தூய இராபர்ட் பெல்லார்மின் திருப்பலி**

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

**முன்னுரை**

நல்ல நிலமாக்கி விதை விதைப்போம்

நமது தாயாம் திருச்சபை இன்று நினைவு கூறும் தூய இராபர்ட் பெல்லார்மின் சிறந்த மக்கள் ஆயராகவும், அனுபவமிக்க வல்லுநரான பேராசியராகவும் விளங்கியவர். இறையியலில் வல்லுநரான இவர் பல்வேறு நூல்களாலும் நற்பண்புகளாலும் கிறிஸ்தவ விசுவாசத்தை ஒளிரச் செய்த உத்தமர் ஆற்றல் மிக்க அனுபவ மேதை. இத்தாலியில் 1542ம் ஆண்டு அக்டோபர் 4ம் நாள் பிறந்தார். தமது 18வது வயதில் இயேசு சபையில் சேர்ந்தார். அறிவாற்றல் பெற்ற புனிதர் பெல்ஜியத்தின் லுவேயின் பல்கலைக்கழகத்தில் முதன்மைப் பேராசிரியர் பதவியேற்றார்.

1598ம் ஆண்டு தமது திடமான விசுவாச வாழ்வாலும், வழிகாட்டுதலாலும் சிறப்புப் பெற்று கர்தினால் பட்டம் பெற்றார். புனித அலோசியஸின் ஆன்மிக குருவானவர் இவரே. 1621ம் ஆண்டு செப்டம்பர் 17ம் நாள் இறைவனோடு முடிவில்லா வாழ்வில் இணைந்தார். இவர் இன்றைய வாசகத்தின் உவமைப்படி நல்ல நிலத்தில் விளைந்து நூறு மடங்காகப் பலன் கொடுத்தவர். இப்புனிதரைப்போல் நாமும் இறைவார்த்தைகள் விதைக்கப்படும் நல்ல நிலம் போன்று பண்பட்டு, பக்குவப்பட்டு மனமாற்றம் அடைவோம். இப்புனிதரின் நினைவு நாளில் வாக்களித்து, பக்தியுடன் இன்றைய திருப்பலியில் பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. இரக்கமே உருவான இறைவா, திருச்சபையைத் தொடர்ந்து இரக்கச் செயல்களிலும், இரக்கத்தின் கலாச்சாரத்திலும், ஏழைகள்மீது அளவில்லா அக்கறைக்கொண்டு வழிநடத்திவரும் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவறத்தார், வேதியர், பொதுநிலையினர் அனைவரும் ஒப்புரவு அருளடையாளத்தில் இரக்கப் பண்பை வெளிப்படுத்தி, விசுவாச உணர்வோடு ஒன்றித்து வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. நானே வாழ்வின் வழியென மொழிந்த இறைவா, உம் மக்கள் அனைவரும் நல்ல நிலத்தில் விதைக்கப்படும் விதைகளாக நல்ல விளைச்சலைக் கொடுக்க தயார் நிலையில் இருக்கவும் வளமான அரசியல், ஆன்மிக வாழ்வுத்தர நாட்டுத்தலைவர்கள், சமுதாயத் தலைவர்கள், ஆன்மிகத் தலைவர்கள் கறைபடாத வாழ்க்கை வாழ்ந்துக் காட்டவும் தேவையான வரங்களை அவர்களுக்கு அளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. வானக மருத்துவரே இறைவா, இன்றைய நவீன உலகில் தீராத நோயினால் துன்பங்களை அனுபவித்துக்கொண்டிருக்கும் இக்காலக் கட்டத்தில் அரசும், சட்ட நிபுணர்களும் கடவுளுக்கு எதிரான செயல்பாடுகளில் ஈடுபடாமலிருந்து மனச்சான்றின்படி நடக்கத் தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

**18.09.2016 ஆண்டின் பொதுக்காலம் 25ம் ஞாயிறு திருப்பலி**

திரு. DVR. ராஜா

**முன்னுரை**

இன்று உலகமயமாதல், வர்த்தகமயமாதல், எந்திரமயமாதல், விஞ்ஞானமயமாதல் என்ற பெயரில் படைத்த கடவுளையே நினைக்க நேரமில்லாமல் பரபரப்புடன் வாழ்கிறோம். பணமும் வசதியும்

இருந்தால் எதனையும் செய்யலாம் என்று எண்ணி வறியோரை நசுக்கி, ஒடுக்கப்பட்டோரை ஆளுமை செய்ய எத்தணிக்கிறோம். கள்ளத்தராசு ஆண்டவருக்கு அருவருப்பானது என்ற விவிலிய வார்த்தைகளை மறந்து வாழ்கிறோம். இயேசு கிறிஸ்துவே மனிதனையும் கடவுளையும் இணைக்கும் பாலமாக விளங்குகிறார். எனவே அவரது மீட்பின் மகிமையை உணர்ந்தவர்களாய், எளியவன் ஒருவருக்கு செய்யும்போதெல்லாம் எனக்கே செய்தீர்கள் என்பதை நினைவில் கொண்டு எளியோர்க்கு உதவிடவும் எல்லாத் தலைவர்களுக்கும் உயர் பொறுப்பில் உள்ளவர்களுக்கும் நாம் இறை வேண்டல் செய்வோம். வருவேன் என்று வாக்குரைத்தவர் வருமுன் நம்மைத் தகுதியோடு தயார்நிலையில் இருந்து ஒளியின் மக்களாய் விளங்கவும் இயேசு கிறிஸ்துவின் போதனையை நமது இதயத்தில் பதித்து வாழ்ந்து நற்சான்று பகரவும் இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கேற்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. **திருச்சபைக்காக மன்றாடுவோம்:** அன்பு இறைவா, முதுமையில் வல்லமை தருவேன் என்றீரே, எமது திருத்தந்தைக்கு நல்ல உடல்நலமும், உமது பணியைச் செய்ய போதுமான சக்தியையும் தந்து அவர் தமது மந்தையை திறம்பட வழிநடத்த தேவையான அருளாசீரையும் ஆன்ம சரீர நலத்தையும் தந்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. **நாட்டுத்தலைவர்களுக்காக மன்றாடுவோம்:** இரக்கமுள்ள இறைவா, ஆட்சியாளர்கள் மக்களுக்கு விரோதமாய் செயல்படாமல் ஏழை எளியவர்களின் உரிமைகளைப் பாதுகாத்து மக்கள் யாவரும் நெருக்கடியின்றி இயல்பாய் வாழ எல்லோர்க்கும் எல்லாமும் கிடைக்கும் வகையில் நன்மனதோடு நல்லாட்சி செய்திட தேவையான ஞானத்தைத் தந்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. பங்கு மக்களுக்காக மன்றாடுவோம். கனிவுள்ள இறைவா, எம் பங்கு மக்கள் அனைவரும் தங்களின் விசுவாசத்தில் வேரூன்றி வளரவும் அவர்கள் குடும்பங்களில் உள்ள பிரச்சனைகள் தீரவும், படித்து வேலையில்லாத இளைஞர்களுக்கு நல்ல வேலை கிடைக்கவும், திருமணமாகாதவர்களுக்கு நீர் தாமே ஏற்ற துணையைத் தந்திடவும், வறுமையின் பிடியில் உள்ளவர்களுக்கு வளமான வாழ்வைத்தர வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 21.09.2016 தூய மத்தேயு திருப்பலி

திருமதி. ராணி சம்பந்தன்

**முன்னுரை**

இறையன்பில் இணைந்துள்ள இனிய சமூகமே, நமதாண்டவர் இயேசுகிறிஸ்துவின் நற்செய்தியாளர் தூய மத்தேயுவின் விழாவினை இன்று சிறப்பு செய்வோம். வரி வசூலிப்பது பாவம் என்று கருதும் சமூக சூழ்நிலையில் அவரை தேர்ந்தெடுத்து முன்னிலைப் படுத்துகிறார் இயேசு. வரிதண்டுபவருடன் சேர்ந்து உணவருந்துகிறார். இதைக்கண்ட பரிசேயர் இதுப்பற்றி சீடர்களிடம் கேட்டபோது இயேசுவே இதற்கு பதிலளிக்கிறார். "நோயற்றவர்க்கு அல்ல, நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை. பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன், பாவிகளையே அழைக்க வந்தேன்". இயேசுவின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து உடனே அவருடன் இணைந்து நற்செயல் புரிந்து இறைவனுக்கு உகந்தவர்களாக வாழ புனித மத்தேயுவின் வாழ்க்கை நமக்கு அழைப்பு விடுக்கிறது. இவரைப்போன்று இயேசுவுக்கு சான்று பகர அருள்வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அன்பின் இறைவா, திருச்சபையை தாங்கி நிற்கும் தூண்களான திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் பொதுநிலையினர் அனைவரும் ஒரே எதிர்நோக்குடன் ஒரே ஆண்டவர், ஒரே நம்பிக்கை, ஒரே திருமுழுக்கு என்பதை புரிந்து இறைவனுக்கு சான்று பகரும் வாழ்க்கை வாழ உம்மை மன்றாடுகிறோம்.

2. இரக்கத்தின் இறைவா, வறுமையின் சோகத்தால் குழந்தைகளை காப்பகங்களில் விட்டுவிட்டு பிரிவினால் வாடும் பெற்ற தாய் உள்ளங்களுக்கும், தாய் தந்தையரை பிரிந்து வாழும் அவர்களின் அன்பின்மையால் தவித்து அனாதை இல்லங்களில் வாடும் இளம் நெஞ்சங்களுக்கும் நீரே உமது இரக்க பெருக்கினால் ஆறுதல் தரும்படி உம்மை மன்றாடுகிறோம்.

3. "விசுவாசத்தின் நாயகனே இறைவா, அறுவடையோ மிகுதி, வேலையாட்களோ குறைவு" என்ற வார்த்தையின்படி இறை அழைத்தல் குறைந்து வரும் இக்காலச் சூழலில் குடும்பங்களில்

பிள்ளைகளை இறைவனுக்கு பணிபுரிய நல்ல குருவானர்களை உருவாக்க அர்ப்பணிக்க கூடிய பெற்றோர்களை நீர் ஆசீர்வதிக்கும்படியும் இளம் பிள்ளைகளுக்கு அருட்பணிபுரியும் ஆர்வத்தை வழங்க வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

4. அமைதி தரும் இறைவா, விபத்துக்களும், தற்கொலைகளும், அநியாயமான கொலைகளும் பெருகிவரும் இவ்வுலகில் அமைதி உரித்தாகுக என்று உம் சீடர்களுக்கு உரைத்தபடி உம்முடைய அமைதியை மக்களுக்கு வழங்க வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

**25.09.2016 ஆண்டின் பொதுக்காலம் 26ம் ஞாயிறு திருப்பலி**

திருமதி. டிலைலா சேவியர்

**முன்னுரை**

இருப்பதை இல்லாதவர்களோடு பகிர்ந்து வாழ்வோம்

இறை இயேசுவில் அன்பார்ந்த இறைமக்களே, பொதுக்காலத்தின் 26ம் ஞாயிற்றுக்கிழமையில் இருக்கும் நமக்கு இன்றைய நாளின் வாசகங்கள் அனைத்தும் "ஏழைக்கு உதவி செய்ய மறக்க வேண்டாம்" (கலா 2:10) என்ற உயர்ந்த பண்பினை நினைவூட்டுகிறது.

இன்றைய வாசகங்கள் இறைவனின் இரக்கத்தைப் பெற்றவர்கள் எப்படி நடந்துக்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தப்படுகிறது. மேலும் விவிலியத்தில் நல்வாழ்வுக்கு போதுமான படிப்பினைகள் வழங்கப்பட்டுள்ளன என்னும் உண்மை உரக்கச் சொல்லப்பட்டுள்ளது. இன்றைய நாளில் நாம் நம்மிலும் தாழ்ந்தோருக்கு இரக்கத்தை நற்செயல்களில் காட்டவில்லையெனில் என்ன நடக்கும் என்ற எச்சரிக்கையும் நமக்கு தரப்படுகிறது. எனவே இத்திருப்பலியில் "பகிர்வு", "இரக்கம்" என்ற பண்புகளை நம்மில் ஊன்றி வளர்க்க இரக்கமே உருவான இறைவனிடம் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. இரக்கமே உருவான இறைவா, இரக்கமுடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர் என்ற உமது போதனையை செயலாக்க திருத்தந்தை அறிவித்துள்ள இறை இரக்கத்தின் ஆண்டில், திருச்சபையின் மக்களாக நாங்கள் அனைவரும் திருத்தந்தையோடு இணைந்து எம் சகோதர சகோதரிகளின் துன்பங்களை உணரவும், உணர்ந்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்யும் தாராள மனதைத் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. பாலைவனத்தில் பசியால் வாடிய மக்களுக்கு மன்னாவை பொழிந்தவரே, இன்றைய நாட்களிலும் சமுதாயத்தில் பசியால் வாடும் குழந்தைகள் முதல் பெரியவர்களை உமது பாதத்தில் சமர்ப்பிக்கின்றோம். இவர்களுக்கு வேண்டிய உணவினை அளித்து உடல் சுகமும், உழைப்பதற்கு உற்சாகமும், ஆற்றலும் தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. பசித்தோரை நன்மையால் நிரப்பும் இறைவா, மற்றவர்களின் துன்பத்தை உணர எங்களுக்கு கற்றுத்தாரும். நாங்களும் உம்மைப்போல் எங்கள் அயலாரிடம் கருணை, அன்பு, பரிவு, ஏற்றுக்கொள்ளுதல், விட்டுக்கொடுத்தல் போன்ற இரக்கச் செயல்களை செய்திட நல்லுள்ளத்தை தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. தன்னை பின்தொடர்ந்து வந்த பெருந்திரளைக் கண்டு மனமிரங்கிய இறைவா, மக்களின் பசியை நீக்க தன்னிடமுள்ள இரண்டு மீன்களையும், ஐந்து அப்பங்களையும் கொடுத்து உதவிய சிறுவனைப்போல எங்களிடமுள்ளவைகளை மற்றவர்களுக்கு பகிர்ந்துக்கொடுக்கும் தாராள மனதைத் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

5. கானாவூர் திருமணத்தில் புதுமையினை நிகழ்த்திய இறைவா, இன்று தேவையில் தவித்துக்கொண்டிருக்கும் உம் மக்களை ஆசீர்வதித்து அவர்களின் தேவையறிந்து உம் அன்னையின் பரிந்துரையின் பேரில் நிகழ்த்திய புதுமையினைப்போன்று நாங்களும் மற்றவர்களின் தேவை உணர்ந்து குறிப்பிட்ட நேரத்தில் அவர்களுக்கு உதவி செய்யும் நல்ல மனதைத் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**27.09.2018 தூய வின்செனட் தெ பவுல் திருப்பலி**

திரு. லூயிஸ் சகாயராஜ்

**முன்னுரை**

"அவர்கள் வாரி வழங்கினர், ஏழைகளுக்கு ஈந்தனர், அவர்களது நீதி என்றென்றும் நிலைத்திருக்கும்" (திபா. 112:9)

இறையன்பில் இனியோரே, இயேசுவின் இனிய நாமத்தில் நல்வாழ்த்துக்கள். இன்று நாம் கொண்டாடும் புனிதர் வின்சென்ட் தெ பவுல் உலகம் முழுவதும் நன்கு அறியப்பட்டவர். அவரது வழியைப் பின்பற்றி நடைபெறும் நடத்தப்பெறும் அறச்செயல்களால் அவரது பெயரும், அதன் மூலமாக இறைவனின் திருப்பெயரும் போற்றி பெருமைப்படுத்தப்படுகின்றது. தனது பணிக்காலம் முழுவதும் ஏழை, எளிய, துன்புறும் மக்களின் தேவைக்காகவும், அவர்களின் வளர்ச்சிக்காகவும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் தூய வின்சென்ட். குருவாக மாறினால் தன் குடும்பத்தை முன்னேற்றப் பாதைக்கு வழிநடத்த வாய்ப்பு கிடைக்கும் என்ற எண்ணத்தில் குருத்துவ நிலைக்கு தன்னை ஈடுபடுத்திக் கொண்ட வின்சென்ட் குருவாக ஆனபின் தன் நிலையை மாற்றிக்கொண்டு, பிறர் உதவி பணிக்காக நல்ல சமாரியனைப்போல அர்ப்பணித்தார். புனித நிலைக்கும் உயர்த்தப்பட்டார். இக்கால துறவியரும், குருக்களும், வியாபார தொழிலில் இலாப நோக்கமின்றி செயல்படவும், எளியோரின் துயர் துடைக்கும் கருவிகளாக வாழவும் இன்று சிறப்பாக செபிப்போம். மேலும் தூய வின்செண்ட் பெயரால் செயல்படும் வின்செட்சியன் குருக்களுக்காகவும், துறவிகளுக்காகவும், ஏழை எளிய மக்களின் மேம்பாட்டுக்காகவும் உழைக்கும் தூய வின்செட் தெ பவுல் சங்கத்திற்காகவும் இந்நேரத்தில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அன்புத் தந்தையே இறைவா, திருச்சபை முழுவதும் உமது அருள் பொழியப்படவும் திருத்தந்தையின் கோட்பாடுகளை எளிமை, நேர்மை, உழைப்பு ஆகியவற்றை அனைத்து ஆயர்கள், குருக்கள், துறவியர் அனைவரும் பின்பற்றி வாழவும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்புத் தந்தையே இறைவா, தூய வின்சென்ட் தெ பவுல் பாதுகாவலில் செயல்படும் துறவற சபையைப் பாதுகாத்து அவர்களின் ஆன்மிகப் பணிகளை சிறப்பாக செய்திடத் தேவையான நலன்களையும் வளங்களையும் பொழியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்புத் தந்தையே இறைவா, தூய வின்சென்ட் தெ பவுல் விழாவில் பங்கேற்கும் எங்களின் ஒவ்வொருவரிலும் உதவி புரியும் மனப்பான்மையும் ஏழை எளிய மக்களிடையே அக்கறையும், எளியோரை ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தையும் எம்மில் வளர உம் அருளைப்பொழிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**29.09.2016 முப்பெரும் அதிதூதர்கள் திருவிழா திருப்பலி**

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

**முன்னுரை**

இறைவனின் அதிதூதர்களாகிய மிக்கேல், கபிரியேல், இரபேல் ஆகியோர் வெவ்வேறு நிலைகளில் நமக்குத் தெய்வீகப் பராமரிப்பை பெற்றுத்தருவதை உணர்கிறோம். இறைவன்திருமுன் நின்று பணிபுரியும் அத்தூதர்களுடைய அருட்காவல் நமக்குத் தொடர்ந்து கிடைத்துக் கொண்டே இருக்கிறது. தீமையை எதிர்த்து நாம் மேற்கொள்ளும் போராட்டத்தில் அவர்கள் நம்மோடு நின்று போரிட்டு நம்மைக் காக்கவும், இறைவனுடைய ஆற்றலையும், உடனிருப்பையும் நன்மைத் தனத்தையும் நமக்குப் பெற்றுத் தருபவர்கள். **மிக்கேல்:** கடவுளுக்கு நிகரானவர், தீமையை எதிர்ப்பவர், சாத்தானைத் தண்டிப்பவர் (திவெ 12:7). **கபிரியேல்:** கடவுளின் ஆற்றல், இறைவனின் வல்லமையை மனிதருக்குத் தெரிவிப்பவர், திருமுழுக்கு யோவானின் தந்தை சக்கரியாவுக்கும் (லூக் 1:1). மரியாவுக்கும் இறைவாக்குரைத்தவர் இவரே (லூக் 1:25). **இரபேல்:** கடவுள் குணமாக்குகிறார், பழைய ஏற்பாட்டில் தொபியாசைப் பாதுகாத்து வழி நடத்தியவர் இவரே (தோபித்து 12:15). இத்திருத்தூதர்களைப் போலவே இறைவனின் கருவிகளாக மாறிட வரம் வேண்டி இப்பலியில் இணைவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. எப்படிப்பட்ட இடர்வரினும் இறையரசில் தொடர் பயணம் செய்ய ஆற்றல் தரும் இறைவா, விண்ணகத்தில் அதிதூதர் மிக்கேலுக்கும் அரக்கப் பாம்பிற்குமிடையே நடக்கும் போரைப் போல இவ்வுலக வாழ்க்கைப் போராட்டங்களிலிருந்தும், வழிநடத்தும் இடர்பாடுகளிலிருந்தும் உமது பேரருளால் எங்களை வழி நடத்தத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அமைதியின் நற்செய்தியே இறைவா, அதிதூதர்கள் நல்லவர்களுக்கு துணை நின்று தெளிவுப்படுத்தி, திடப்படுத்தி, மீட்பிற்கு வழிவகுத்த கபிரியேல் அதிதூதர்போல் எங்களுக்கும் இறை ஆதரவையும் பாதுகாப்பையும் தரும் நற்செய்தியை அளிக்க வேண்டிய அருளைத் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

3. வாழ்வளித்து வழிநடத்துபவரே இறைவா, பழைய ஏற்பாட்டில் தொபியாசை வழிநடத்தி வாழ்வளித்து குணமாக்கிய அதிதூதர் எங்களையும் நோய்களிலிருந்தும் குணமாக்கி, வறுமைப்பிணியிலிருந்து வளமையான வாழ்வுக்கு இட்டுச்செல்லும் வழிகளில் நடந்து செல்லத் தேவையான வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**30.09.2016 தூய எரோணிமுசு / ஜெரோம் திருப்பலி**

திரு. ராணி வில்சன்

**முன்னுரை**

"மறைநூலை அறியாமை, கிறிஸ்துவை அறியாமை"

மறைநூல்தான் நம் வாழ்வு. இன்றைய புனிதர் எரோணிமுசு யூகோஸ்லாவியா எனப்படும் டால்மிசியாவில் ஸ்டிரின் என்ற ஊரைச் சேர்ந்தவர். அங்கு படிப்பை துவங்கி, பின் உரோமை சென்று அதன்பின் பாலைவனத்தில் தனிமையில் வாழ்ந்து இறுதியாக பெத்லகேமில் கிறிஸ்து தோன்றிய குகை எனப்படும் குகையில் வாழ்ந்தவர். மறைநூலை முதன் முறையாக சிறப்பான முறையில் லத்தீனில் மொழி பெயர்த்து அதற்கு "வுல்கேட்" என பெயரிட்டதில் இவரின் பெருமை அடங்கியுள்ளது. நாள்தோறும் மறைநூலை நாம் ஆழ்ந்து படிப்போம் இந்த வாய்ப்பை பயன்படுத்தி இறைவன் நமக்கு தருகின்ற ஆற்றலைப்பெற்று உறுதியுடன் ஒவ்வொரு நாளையும் எதிர்கொள்வோம். புனிதர் எரோணிமுசு போல இறைவார்த்தையின் மேன்மையை உணர்ந்து செயல்படுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. புனிதம் நிறைந்த இறைவா, இப்புனித பயணத்தை நோக்கி பயணிக்க எம் திருத்தந்தை, பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு பல இரக்கச் செயல்களை செய்து வருகிறார். அவரது வழிகாட்டுதலின் படி நடந்து எங்கள் திருஅவை இந்த உலகிற்கு முன் மாதிரியாக திகழ அனைத்து வரங்களையும் தந்து ஆசிர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. திருநூலை எமக்களித்த இறைவா, வாய்ப்புக் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் நற்செய்தி அறிவிப்புப் பணியை நாங்கள் ஆற்ற வேண்டும். அவற்றினை எதிர்க்கொள்ளும் தடைக்கற்களையும், சவால்களையுமே நாங்கள் ஆயுதமாக ஏந்திக் கொண்டு இப்பணியில் சிறந்து விளங்க நீர் புனிதர் எரோணிமுசுக்கு துணை நின்றதுபோல எங்களுக்கும் துணை நிற்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. தாயும் தந்தையுமான இறைவா, எங்கள் தலத் திருஅவையாம் குடும்பம், பங்கு, மறைமாவட்டம், தமிழகம் மற்றும் இந்திய திருஅவையும் உலகத் திருஅவையும் மறைநூலை அறியாமை எனும் மாய இருளினின்று விலகி, கிறிஸ்துவை அறிவோம் எனும் ஒளியில் மிளிர்ந்து மகிழ்ந்து பயணிக்க வேண்டிய அருளைப்பொழிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## விசுவாசத்தில் வளர...

### 1. அன்னை தெரேசா: புனிதையாகும் தேவதை

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

"மிகச் சிறியோராகிய என் சகோதர சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்வதை எல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்கு சொல்லுகிறேன்" (மத். 25:40).

ஆண்டவர் இயேசுவின் இவ்வுயரிய வார்த்தைகளை வாழ்வாக்கி வாழ்ந்தவர் அருளாளராகிய அன்னை தெரேசா. இவர் மேற்கில் உதித்த சூரியன், ஆயிரம் ஆயிரம் ஏழைகளின் பசிபோக்கி, உடையும் உறைவிடமும் தந்து தங்கள் மரண வேளையில் தம் உயிரை இறைவன் கையில் ஒப்படைக்க

வழி செய்தவர். உதவி செய்வது, இவருக்கு ஒரு வேலையோ, சிறிது சேவையோ அல்ல, அதுவே இவரது வாழ்க்கைப் பாணி. இவரது பணிக்கான அருளின் ஊற்று, இறைவனிடமிருந்து வந்தது என்று உறுதியாக அறிந்திருந்தது இவரது தனிச்சிறப்பு. இதனால் தானே அவர் "நான் வெறும் எழுதுகோல், எழுதுபவர் இறைவன்" என்று கூறுவார். அவரும் தாழ்ச்சியிலும் எளிமையிலும் சுடர்விட்டு வாழ்ந்து அனைவருக்கும் அன்னையாக உதிரத்தில் கருத்தரிக்கா அன்னையாக உயர்ந்தவர்.

இந்தக் கருணை தேவதையை ஈன்றெடுத்தது யூகோஸ்லேவியா நாட்டின் ஸ்காப்னே நகர். நிக்கோலாஸ் பொஜாக்சியு, திரனா பார்னாயி தம்பதியின் மூன்றாம் கனி. 1910ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 26ம் நாளில் பிறந்த இவருக்கு மறுநாளே திருமுழுக்களித்து ஆக்னஸ் கொன்சாகா பொஜாக்சியு என்று பெயரிட்டனர். செல்வந்தரான நிக்கோலா அரசியல் ஈடுபாடு கொண்டவர் அதனாலேயே வஞ்சகர்கள் இவரை விருந்தில் மருந்து வைத்து கொன்றனர். அப்போது ஆக்னசுக்கு 9 வயது. தந்தையை இழந்த நிலையில் அந்த அரும்பு வாடிவிடாமல் காத்து வளர்த்தது அவரது தாய் திரனா தான். துன்பத்தையும், வறுமையையும் இன்முகத்துடனும், உற்சாகத்துடனும் வரவேற்கும் சிறப்பு பாடத்தை தாயிடமிருந்தே கற்றார்.

தொழில் பங்குதாரர்கள் அவர்களின் பணம், சொத்துக்களை அபகரித்ததால் அவர்களுக்கு மிஞ்சியிருந்தது வீடு மட்டுமே. இருந்த வசதிகளை இழந்தாலும், வறுமை தன் குடும்ப வாழ்வை வளைத்துவிடாமல் இருக்க, தாய் திரனா கலைத் திறமையில் வளர்ந்த கைவேலைப்பாடுகள், கம்பளி விரிப்புகள், இவற்றை உருவாக்கி வாழ்வை நடத்தினார். அவர்கள் வாழ்ந்த திரு இருதய பங்கு கோயிலுக்கு 1925ல் இயேசு சபை குரு ஜாம்ரென் கோவிக் வந்தார். ஆக்னஸ் புத்தகம் படிக்கும் ஆர்வத்தினால் அவரிடமிருந்து நூல்களை வாங்கி படித்தவர். வங்காளத்தைப் பற்றி அறிந்து கொண்டதோடு, கல்கத்தாவில் பணியாற்றும் குருக்கள் தங்கள் பணிகள் பற்றி எழுதிய கடிதங்களையும் படித்தார். தாமும் இந்தியா சென்று பணியாற்ற வேண்டும் என்ற உந்துதல் பெற்றார்.

தனது 18வது வயதில் துறவு வாழ்விற்குச் சென்றிட அன்னையின் அனுமதியுடன் அயர்லாந்து சென்று ஆங்கிலம் பயின்று ஆன்மிகப் பணிக்காற்றை சுவாசித்தார். புனித குழந்தை தெரேசாவின் பாதையைத் தெரிந்தவராய், தெரேசா எனும் அவர் பெயரையே தனக்கு சூட்டிக் கொண்டார். இந்திய மண்ணாம் கல்கத்தாவில் 6.11.1929ல் கால் பதித்தார். டார்ஜிலிங்கில் இறைப்பயிற்சியின்போது ஏழைகளுக்கும் நோயாளிகளுக்கும் நற்பணி செய்யும் பக்குவம் அடைந்தார். மருத்துவமனையில் செவிலியப் பணி அதன் பின் கல்கத்தாவில் புனித மேரிஸ் கல்லூரியில் ஆசிரியப் பணி. 1937ஆண்டு மே மாதம் அவரின் ஆசை கனவு நிறைவேறியது. கன்னியர் பட்டம் பெற்றார் கற்பித்தலில் மூழ்கியிருந்தாலும், மோத்தீஜின் பகுதி சேரிகள் அவரின் பார்வையை ஈர்த்தது. கடை நிலையோருக்காய் ஒடுக்கப்பட்டோருக்காய் துயரப்படுவோருக்காய் தன்னை அர்ப்பணிக்க லோரேடோ இல்லத் தலைமை கன்னியரிடம் தனித்துப்போய் தொண்டாற்றிட அனுமதி வேண்டினார். அவரும் ஆன்ம குரு தந்தை செலஸ்ட் மூலம் கல்கத்தாவின் பேராயர் பெரியோரிடமிருந்து அனுமதி பெற்றுத் தந்தார். திருச்சபையும் அனுமதி அளித்தது.

துயரம் மிகுந்திருந்தும் மடத்தைவிட்டு 1948ம் ஆண்டு ஆகஸ்ட் 16ல் ஒரு சிலுவை ஒரு செபமாலை மூன்று சேலைகளை மட்டுமே உடைமையாகக் கொண்டு பூமி பந்தையே தனக்குப் பின்னால் சுழன்றிட செய்யப் புறப்பட்டார். பணி புரிய சேரி சென்ற இவரை சூழ்ந்து கொண்ட பிள்ளைகள் பள்ளிக்குச் செல்லாதது அவர்களின் வசதியின்மையே காரணம் என்றறிந்து என்னிடம் அனுப்பி வையுங்கள் நானே கற்றுத் தருகிறேன் என்று சொல்லி முதல் பள்ளியை ஆரம்பித்தார். ஐந்து பிள்ளைகளில் ஆரம்பித்தது நூறு பிள்ளைகள் எட்டியபோது உதவிக்கு அவரின் மாணவி சுபாஷினி தாஸ் வந்தார். 1950ம் ஆண்டு அக்டோபர் 7ஆம் தேதி ஆரம்பமானது அன்பின் பணியாளர் சபை (MISSIONARIES OF CHARITY).

என் இதயத்திலேயே மிக அழகானப் பணி இந்த இறப்போர் இல்லம் தான். காரணம், இறக்கும் மனிதரிடத்தில் இறைவனைப் பார்க்கிறேன் என்று ஆதரவற்ற நிலையில் ஆறுதல் தேடும் முதியோருக்கு தாய் மடியாக "நிர்மல் விடுதியை" (இறப்போர் இல்லம்) ஆரம்பித்தார். "உங்கள் அனுபவத்தால் தொழுநோயாளிகளை தொடுங்கள்" என்று தொழுநோயாளர் இல்லத்திற்கு வித்திட்டார். "நிர்மல் சிசுபவன்" என்ற மையத்தை வறுமையின் காரணமாய் குப்பையில் வீசப்பட்ட குழந்தைகள் மனநோயாலும் உடல் நோயாலும் பாதிக்கப்பட்ட குழந்தைகள் அநாதையாக்கப்பட்ட 8-10 வயது குழந்தைகளுக்காய் ஆரம்பித்தார். மேலும் மன வளர்ச்சி குன்றிய ஊனமுற்ற பிள்ளைகளுக்கென "நிர்மல் கென்னடி மையம்" ஒன்றினையும், வாழ்வில் தவறிப்போன இளம் பெண்கள் பராமரிப்புக்கென என்று பணிவாழ்வின் இமயத்தைத் தொட்டார்.

தனது பணியை விரிவுப்படுத்தும் வகையில் எட்டு விதமான நிலைகளில் பணியாளர்களை உருவாக்கினார். அமைதிக்கான விருது என நோபல் பரிசு, பத்மஸ்ரீ, பாரத் ரத்னா, மகாசேசே என பல விருதுகள் அவருக்குப் புகழாரம் சூட்டின. "எல்லா மதங்களையும் நேசிக்கிறேன், நான் கிறிஸ்துவில் வாழ்கிறேன்," என்று மதங்களைப் பற்றி கூறின அன்னைக்கு மதங்களைக் கடந்து, கோடான கோடி மக்களின் கண்ணீர் மழையில் மூழ்கி இந்திய மண்ணின் இருபெரும் தலைவர்களான காந்தி-நேரு ஆகியோரின் உடல்களைச் சுமந்த பீரங்கி வண்டியில் இராணுவ அணிவகுப்பு அரசு மரியாதையுடன் பீடச் சிறுவர்கள் மெழுகுவர்த்தி ஏந்தி வர அதோ அந்த "சேரி வாழ் புனிதையின்" இறுதி ஊர்வலம். ஆம் சரிந்துபோன சமூகத்திற்கு சாமரம் வீசிய பூமரம் சாய்ந்து விட்டது. வானுலக அழைப்பை ஏற்று "கருணையின் தேவதை" புறப்பட்டு விட்டாள். 1997ம் ஆண்டு செப்டம்பர் 5ம் நாள் ஆண்டவர் வழங்கிய அட்சய பாத்திரம் மூடிக்கொண்டது. பறந்துவிட்டார் அன்னை விண்ணை நோக்கி. 2003ம் ஆண்டு அக்டோபர் 13ல் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் அன்னையை "வணக்கத்துக்குரியவர்" நிலைக்கு உயர்த்தினார். வாழும்போதே புனிதையான அன்னைக்கு மீண்டும் வரும் செப்டம்பர் 4ஆம் நாள் புனிதர் பட்டம். அந்தப் புனிதை தன் வாழ்வில் அனுபவித்த திவ்விய நற்கருணையில் இறைபிரசன்னத்தை நாமும் அனுபவிப்போம், அதே நற்கருணை நாதரை எல்லா மனிதரிலும், துன்புறும் ஏழை மனிதரிலும் காண்போம், ஆண்டவர் பணியென அன்பினைப் பகிர்ந்து கொள்வோம், புனிதராவோம்.

## 2. தந்தை பியோ - இரக்கத்தில் புனித வாழ்வு

திரு. ஜான் சுரேஷ்

தன்னார்வ தொண்டர்களின், செபவீரர்களின் பாதுகாவலர்

ஆண்டவரிடம் செபியுங்கள், ஏனென்றால் இவ்வுலகம் செபத்திற்காக ஏங்குகிறது. எப்பொழுதெல்லாம் உங்கள் இதயம் தனிமையில் ஏங்குகிறதோ அப்போதெல்லாம் இறைவனிடம் செபியுங்கள். ஏனெனில் கடவுளுக்கும் நமது செபம் தேவைப்படுகிறது என்று உரைத்த தந்தை பியோ, இத்தாலி நாட்டில் பியத்தெரல்சினா என்னும் சிற்றூரில் 25.05.1887அன்று பிறந்தார். இவருடைய இயற்பெயர் பிரான்செஸ்கா போர்ஜியோனே. தனது 16வது வயதில் 06.01.1903 அன்று மோர்க்கோனே நகரில் இருந்த கப்புச்சின் சபையில் 3வது துறவியாக சேர்ந்தார். ஜனவரி 22ல் ப்ரான்சிஸ்கன் சபைத் துறவியாக உடை அணிந்தார். அன்று தமது பெயரை பியோ என்று மாற்றிக் கொண்டார். இத்தாலியில் பியோ என்பதற்கு "பத்திநாதர்" என்று பொருள். நவதுறவி பயிற்சி முடித்து முதல் வார்த்தைப்பாடு கொடுத்த பியோ 1907ஆண்டு ஜனவரி 27அன்று நித்திய வார்த்தைப்பாடு கொடுத்தார். 1910ஆண்டு ஆகஸ்டு 10ம் நாள் குருத்துவ அருட்பொழிவு பெற்றார்.

நுரையீரலில் நோய் ஏற்பட்டதால் வீட்டிற்கு சென்ற பியோ 1916வரை அங்கிருந்து தன்னை கவனித்துக் கொண்டார். அதே ஆண்டு செப்டம்பர் மாதம் சான் ஜியோவான்னி ரொட்டொன்சோ கப்புச்சின் மடத்திற்கு வந்தார். அங்குதான் கடைசிவரை வாழ்ந்தார். 1918ஆண்டு செப்டம்பர், 20ம் நாள் திருப்பலி முடிந்த பிறகு எல்லோருடனும் இணைந்து செபம் செய்து கொண்டிருந்தார். அப்போது ஒரு காட்சி. கால்களிலும், கைகளிலும் காயப்பட்ட இயேசு அவர்முன் தோன்றி மறைந்தார். அவ்வளவுதான், அதன்பின் பியோ மரண வேதனை அனுபவித்தார். இயேசுவிடமிருந்த அந்த ஐந்து காயங்களும் இவரின் உடலில் தோன்றி இரத்தம் வடிய ஆரம்பித்ததால் துடிதுடித்தார். எல்லாரும் அதிசயமாக பார்த்தார்கள். மருத்துவர் பரிசோதித்தார்கள். பொதுமக்களோடு இணைந்து திருப்பலி நிறைவேற்றாதீர்கள் என்று வத்திக்கானில் இருந்து உத்தரவு வந்தது. ஆனால் அந்த அறிவிப்பு விரைவில் திரும்ப பெறப்பட்டது.

தந்தை பியோ அவர்கள் இறைவனின் அன்பில் ஊன்றியிருந்தார். ஒப்புரவு அருளடையாளம் வழியாக பாவ மன்னிப்பு வழங்கி ஆறுதல் அளித்தார். இவருடைய மறைப்பணியின் உச்சம் திருப்பலி. இவருடைய திருப்பலியை கண்டவர்கள் திருப்பலியின் மேன்மையை உணர்ந்தனர். தம்மை சந்தித்தவர்கள் கொடுத்த நன்கொடைகளைக் கொண்டு 1956ஆண்டு மே 5ம் நாள் "துன்புறுவோரின் ஆறுதல் இல்லம்" ஒன்றை தந்தை பியோ நிறுவினார். தமது கற்பு இறைவனுக்குரியது என்பதில் அலாதி இன்பம் கண்டார். "செபிக்கும் ஏழைத் துறவியாக இருக்கவே ஆசைப்படுகிறேன்" என்றார்.

இரண்டாம் உலகப்போரில், உலக அமைதிக்காக தனிப்பட்ட விதத்தில் செபம் செய்யுங்கள் என்று திருத்தந்தை 12ம் பத்திநாதர் உலக மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். அதை ஏற்ற தந்தை பியோ ஐந்து நபர்களுடன் செப குழுவை ஆரம்பித்தார். ஐந்து காய வரமுடன் அனைத்து

வேதனைகளையும் தாங்கிக்கொண்டு 50 ஆண்டுகள் வாழ்ந்த தந்தை பியோ 1968 ஆண்டு செப்டம்பர் 23ல் இறந்தபோது அக்குழுவில் 68,000 பேர் உறுப்பினர்களாக இருந்தார்கள்.

"தந்தை" என்று எல்லோராலும் அழைக்கப்படும் தந்தை பியோவை 1999ஆண்டு மே 2 அன்று அருளாளராக அறிவித்த திருத்தந்தை 2ம் யோவான் பவுல் 2002 ஜூன் 16ல் புனிதராக உயர்த்தினார். ஆறுதல் தேடி வருகிறவர்களுடன் சிறிது நேரம் அமர்ந்து பேசி துன்பத்தின் சுமையைக் குறைத்து இறைவனின் திருப்பணி புரிவோம்.

## 3. தந்தை பியோ - புதுமைகளும் அருஞ்செயல்களும்

திருமதி. டிலைலா சேவியர்

"மனமாற்றம் தான் மனித வாழ்க்கையை மேம்படுத்தும் கருவி"

இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற புனிதராக விளங்கும் புனித தந்தை பியோ ஆறாத காயங்களிலிருந்து அற்புதமான நறுமணங்களைப் பரப்பி அதன்மூலம் ஏராளமான அற்புதங்களை நிகழ்த்தும் அருள் வரத்தை பெற்றிருந்தார். குறிப்பாக தந்தை பியோவின் காயங்களிலிருந்து மலர்களின் வாசனை வெளிப்பட்டது. இதுபோன்ற நறுமணத்தை உணர்ந்தவர்கள் தந்தை பியோவின் பிரசன்னத்தை உணர்ந்தார்கள். நறுமணத்தின் நடுவே அருங்காட்சிகளும் அற்புதங்களும் அரங்கேறின. தந்தை பியோவின் காயங்களில் கட்டப்படும் துணிகளும் கூட நறுமணம் கொண்டதாக இருக்கும். இந்நறுமணம், நடக்கப்போகும் நிகழ்ச்சிகளின் முன் அறிவிப்பதாக அமையும். அவை:

1. தந்தை பியோவின் பிரசன்னத்தை நமக்கு உணர்த்தும்
2. நமக்கு ஏற்படப்போகும் ஆபத்தைக் குறித்து எச்சரிக்கை விடுக்கும்
3. பாவங்களுக்குப் பரிகாரம் தேடுவோருக்கு பாவப்பரிகாரம் அளிக்கிறது
4. துயருறும் ஆன்மாக்களுக்கு ஆறுதல் அளிக்கிறது
5. ஆன்ம அமைதி நாடி வருவோர்க்கு அழைப்பாக அமைகிறது

இதுபோன்று நறுமணங்களின் வாயிலாக தனது அருளையும் அற்புதங்களையும் வேண்டி நின்றோர்க்கு நம்பிக்கையையும் ஆறுதலையும் வழங்கினார். ஒருவர் எப்போதும் தனது வேலையை தொடங்கும்போது சிலுவை அடையாளம் வரைந்து ஒரு செபத்தை சொல்லிவிட்டுதான் வேலை செய்வது வழக்கம். ஆனால் ஒருநாள் தன்னுடைய வழக்கத்தை மறந்து விட்டார். அப்போது அந்த இடத்தில் நறுமணம் பரவியதை உணர்ந்தார். உடனே தன் குடும்பம் முழுவதும் அந்நறுமணத்தை உணரச் செய்தார். பின் தந்தை பியோ தன்னை சிலுவை அடையாளமும் செபமும் செய்யத் தூண்டுவதை உணர்ந்தார். தன்னை செபிக்க தூண்டிய தந்தை பியோவுக்கு நன்றி கூறினார்.

ஒரு அருட்தந்தையின் சகோதரி வாதநோயால் துன்புற்றிருந்தார். குருவானவர் தந்தை பியோவின் இரத்தம் தோய்ந்த துணியை அப்பெண்மணியிடம் கொடுத்தார். அந்த துணியைப் பெற்றுக்கொண்ட அவள் அதிலிருந்து வெளிப்பட்ட நறுமணத்தால் திக்குமுக்காடினாள். அதனை அந்த குருவிடம் வெளிப்படுத்தினாள். குரு அவளிடம் "சகோதரி தந்தை பியோ இப்போது உன் அறைக்கு வந்துவிட்டார். உனக்கு தேவையான வரத்தை அவர் தருவார்" என்று கூறினார். அதேபோன்று அவளது வாதநோய் முற்றிலுமாக அகன்றது.

அனிதா என்ற விதவை தாய் தன்னுடைய குழந்தை நோய்வாய்ப்பட்டிருந்ததால் தந்தை பியோவை சந்தித்து தன் குழந்தை சுகம்பெற வேண்டுமென்று எண்ணி பயணமானாள். அக்குழந்தையின் ஆடையையும் புகைப்படத்தையும் தந்தை பியோவிடம் காட்டி மந்திரித்துக் கொண்டாள். திருப்பலியில் பங்கெடுத்து அவரது கையால் நற்கருணையும் உட்கொண்டாள் ஆனால் தந்தையோடு பேச முடியவில்லையே என்று வருந்தினாள். பயணத்தின்போது நறுமணம் ஒன்றை உணர்ந்தாள். அவள் வீட்டிற்குள் வரும்வரை அந்நறுமணம் தொடர்ந்தது. நம்பிக்கையுடன் வீட்டிற்குள் வந்த அவள், மகளைப் பார்த்தாள் மகள் அமைதியாக தூங்கிக் கொண்டிருந்தாள். மகளது நோய் முற்றிலுமாக அகன்றிருந்தது.

தூரின் நகரத்தைச் சேர்ந்த ஒரு சிறுமி கடுமையான நோயால் பாதிக்கப்பட்டிருந்தாள். பரிசோதனை செய்த மருத்துவர்கள் அவளை குணப்படுத்த முடியாது என்று கூறிவிட்டனர். அக்குழந்தையின் பெற்றோர் தந்தை பியோவிடம் கண்ணீரோடு செபித்தனர். திடீரென்று அந்த அறையில் இனிய நறுமணம் வீசியது. அப்போது சிறுமி எழுந்து அமர்ந்தாள். உடனே, மருத்துவர்கள் அவளை பரிசோதனை செய்தனர். மருத்துவர்கள் பெற்றோரிடம் இது நம்ப முடியாத உண்மையும், அதிசயமும் கூட என்று கூறிய மருத்துவர் சாட்சியமும் எழுதினார்.

எம்மா என்ற சிறுமி வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டிருந்தாள் தந்தை பியோவைப்பற்றி கேள்விப்பட்டிருந்த அவள் தன்னையும் தந்தை பாதுகாப்பார் என்று நம்பினாள். ஒரு இரவு தந்தை பியோ புன்னகையுடன் சிறுமியின் முன்பு தோன்றி அவளது படுக்கையில் கை வைத்துவிட்டுச் சென்றார். அந்நேரமே அவள் குணமடைந்தாள். சிறுமி அந்த இடத்தை முத்தம் செய்ய சென்றபோது, அங்கே சிலுவை அடையாளம் இரத்தத்தால் காணப்பட்டு அச்சிலுவை பாதுகாக்கப்பட்டு வருகிறது.

தந்தை பியோ ஒரே நேரத்தில் இரு இடங்களில் தோன்றும் ஆற்றல் கொண்டவர். அருட்தந்தை பிளாசிடோ கொடிய ஈரல் நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். அவரை குணப்படுத்த முடியாது என்று மருத்துவர்கள் கூறிவிட்டனர். ஒருநாள் இரவில், அவரது அருகில் தந்தை பியோ நின்றுக்கொண்டிருந்தார். தந்தை தன் குருமாணவராக இருந்த அருட்தந்தைக்கு ஆறுதல் சொல்வதோடு இறைவன் உங்களுக்கு குணமளிப்பார் என்று கூறி அங்கிருந்த சன்னல் கண்ணாடியில் அவரது கைரேகையை பதித்துவிட்டு மறைந்து விட்டார். காலையில் கண்விழித்த அருட்தந்தை முற்றிலுமாக குணம் பெற்றார். கண்ணாடியில் பதித்திருந்த ரேகை பல ஆண்டுகள் வரை மறையாமல் இருந்ததாக கூறப்படுகிறது.

தனது முன்மாதிரியாலும் வழிகாட்டுதலாலும், ஆத்மா சுத்தமடையும் ஒப்புரவு அருட்சாதனத்தாலும் அன்பு என்னும் விதையை உலகம் முழுவதும் விதைத்துள்ளார் தந்தை பியோ. ஒப்புரவு அருட்சாதனத்திற்கு அதிகம் முக்கியத்துவம் கொடுத்தவர். அதன் மேன்மையை பலருக்கு எடுத்து சொல்லி பலரை மனம்மாற்றியவர். திருப்பலியில் இறுதிவரை முழு ஈடுபாடு கொண்டவர். மரியன்னைமீது ஆழ்ந்த அன்பும், பக்தியும் கொண்டிருந்தார். திருச்சபையின் தலைவர் திருத்தந்தைக்கு கீழ்ப்படிவதிலும் திருச்சபை சட்டங்களை மதித்தும் நடந்தார். தனக்கு இறைவன் அளித்த மாபெரும் கொடைகளை தன்னுடைய தற்பெருமைக்கும், சுயநலத்திற்கும் பயன்படுத்தாமல் மனித நேயத்தை வளர்க்கும் ஓர் அற்புத மனிதராக வாழ்ந்து புனிதரானார்.

## 4. திருச்சபை செய்திகள்

சசோ. சுரேஷ் இயேசுபாலன் சச.,

1985ம் ஆண்டு, திருத்தந்தை புனித 2ம் ஜான்பால் அவர்கள் உருவாக்கிய இந்த அற்புத முயற்சியான உலக இளையோர் நாள் அடுத்த இரு ஆண்டுகள் மறைமாவட்ட அளவில் உலகெங்கும் தொடர்ந்து நடைபெறும். 2019ம் ஆண்டு உலக இளையோர் நாள் நிகழ்வுகள், பானாமா நாட்டில் நடைபெறும் என்று தெரிவித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

2. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், செப்டம்பர் 4ம் தேதி அன்னை தெரேசா அவர்களை புனிதராக அறிவிக்க உள்ளதை முன்னிட்டு அதற்கு இரு தினங்களுக்கு முன்னதாக செப்டம்பர் 2ம் தேதி சிறப்பு தபால்தலை ஒன்றை வெளியிடத் திட்டமிட்டுள்ளது வத்திக்கான் தபால்துறை. ஒரு தாளில் பத்து தபால்தலைகள் என ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் தாள்களை அச்சடித்து விநியோகிப்பதற்குத் திட்டமிட்டிருப்பதாகவும் வத்திக்கான் தபால்துறை மேலும் கூறியது. சுருங்கிய அதேநேரம் சுடர்விடும் முகத்தைக்கொண்ட அன்னை தெரேசா அவர்கள் உருவம் பதித்த இத்தபால்தலை 95சென்ட் விலையுடையது.

3. லெசோத்தோ மற்றும் ஆப்ரிக்காவின் தென்பகுதி எல் நீனோ காலநிலையால் கடும் வறட்சியை எதிர்நோக்கி வரும் வேளை லெசோத்தோ மக்களுக்கு அவசரகால உதவியாக நான்கு இலட்சம் டாலரை அனுப்பியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். ஏல் நீனோ காலநிலையால் அதிகமாகத் தாக்கப்பட்டுள்ள லெசோத்தோ நாட்டின் வேளாண் உற்பத்தி 62 விடுக்காடு பாதிக்கப்பட்டுள்ளது மற்றும் அந்நாட்டின் பத்து மாவட்டங்களில் ஐந்து இலட்சம் மக்கள் கடும் பசிக்கொடுமையால் துன்புறுகின்றனர்.

4. கிறிஸ்தவ மறையை சிறுபான்மை மதமாகக் குறைக்கும் முயற்சிகளில் பலர் ஈடுபடலாம் ஆனால் அதை ஒருபோதும் அழித்துவிட முடியாது என்று இத்தாலிய ஆயர் பேரவையின் தலைவர் கர்தினால் ஆஞ்செலோ பஞ்ஞாஸ்கோ அவர்கள் கூறினார். கிறிஸ்தவ மறையை அழித்துவிட்டு. புறவினத்தாரின் கலாச்சாரத்தைக் கட்டியெழுப்பும் முயற்சியில், உரோமைப் பேரரசன் வலேரியன், 258ம் ஆண்டு ஆகஸ்ட் 10ம் தேதி திருத்தொண்டர் இலாரன்ஸைக் கொலை செய்தார் என்பதை தன் மறையுரையில் சுட்டிக்காட்டிய கர்தினால் பஞ்ஞாஸ்கோ அவர்கள் இன்றைய காலத்தில் கிறிஸ்தவ மறையை பல்வேறு வழிகளில் ஒதுக்கி வைக்கும் முயற்சிகள் நிகழ்கின்றன என்று கூறினார்.

5. பழங்குடி இனத்தைச் சேர்ந்த பெண் ஒருவர், புனிதராக உயர்த்தப்படுவதற்குத் தேவையான தன் பயணத்தை துவங்கியிருப்பது கடவுளின் கருணையால் நிகழ்ந்த ஒரு செயல் என்று ராஞ்சி பேராயர் கர்தினால் டெலெஸ்போர் டோப்போ அவர்கள் கூறினார். இந்தியாவின் சோட்டா நாக்பூர் பகுதியின் பழங்குடியினத்தைச் சேர்ந்த அருள் சகோதரி மேரி பெர்னதெத் கிஸ்போட்டா பிரசாத் அவர்கள், புனித அன்னம்மாள் புதல்வியர் என்ற துறவு சபையை நிறுவியவர். இந்த அருள் சகோதரியை புனிதராக்கும் முயற்சிகளைத் துவங்க திருப்பீடம் அளித்த அனுமதியைத் தொடர்ந்து அருள் சகோதரியை இறையடியார் என்று ராஞ்சி கர்தினால் டோப்போ அவர்கள் அறிவித்த திருப்பலியில் பழங்குடி மக்களுக்கு கிடைத்த ஓர் அரிய வரம் இது என்று குறிப்பிட்டார்.

6. இந்திய தலைநகர் டெல்லியில் கடந்த நான்கு ஆண்டுகளில் பாலியல் வன்கொடுமைகள் மூன்று மடங்காக அதிகரித்துள்ள வேளை, டெல்லியை பெண்களுக்குப் பாதுகாப்பான இடமாக மாற்றுமாறு அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார் டெல்லி பேராயர் அனில் கூட்டோ. டெல்லியில் பெண்களும் சிறுமிகளும் பாலியல் வன்செயல்களால் தாக்கப்படுவது அதிகரித்து வருவது மிகுந்த வேதனையளிப்பதாகவும் கூறியுள்ளார் பேராயர் அனில் கூட்டோ. 2012ம் ஆண்டுக்கும், 2015ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஒவ்வொரு நாளும் குறைந்தது நான்கு பெண்கள் வீதம் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாகியுள்ளனர் என்று காவல்துறை கூறுவதாக, PTI செய்தி நிறுவனம் கூறுகிறது.

## சுடர் வாசகர் போட்டி 26 முடிவுகள்

1. தூய ஜான் மரிய வியான்னி
2. தோலை உறிக்கப்பட்டு சிலுவையில் தலைகீழாக அறையப்பட்டு இறந்தார்
3. திருத்தந்தை 12ஆம் பத்திநாதரால், 11.10.1956 அன்று ஏற்படுத்தப்பட்டது
4. தூய பெர்னார்து
5. 69வது
6. பனிமழை பொழியச் செய்து அடையாளம் காட்டினார்
7. உங்களுக்கு திரும்பவும் பலன் கிடைக்காத ஒரு தியாகச்செயலை, தேவையில் இருக்கும் ஒருவருக்காக செய்து அதை இறைவனிடம் ஒப்புக்கொடுங்கள்
8. தூய மாக்சி மில்லியன் கோல்பே
9. போலந்து நாட்டின் கிராக்கோவில், ஜூலை 26, முதல் 31வரை
10. தூய மோனிக்கம்மாள்
11. நத்தானியேல்
12. முதிர்ந்த நெல்லிக்கனியும் மூத்தோர் சொல்லும் முதலில் கசக்கும் பின் இனிக்கும்
13. 201வது பிறந்த நாள்
14. அன்னை ஆண்டவரில் ஆனந்தம் கொள்கிறார்
15. தனது 27வது வயதில்

## அடுத்த சுடரில்

### பகுதி - 1

குழந்தை இயேசுவின் புனித தெரேசா
புனித பிரான்சிஸ் அசிசியார்
செபமாலை அன்னை விழா
திருத்தந்தை 23ம் ஜான்
புனித அவிலா தெரேசா
மறைப்பரப்பு ஞாயிறு
புனித அந்தியோக்கு இஞ்ஞாசியார்
புனித லூக்கா
சிலுவையின் புனித பவுல்
திருத்தந்தை 2ம் ஜான் பால்
பொதுக்கால ஞாயிறுகள்

### பகுதி - 2

1. திருத்தந்தை 23ம் ஜான் திருச்சபைக்கு செய்த பெரும்பணி
2. திருத்தந்தை 23ம் ஜான் தந்த இரக்கத்தின் சாட்சியம்
3. செபமாலையும் கிறிஸ்தவ விசுவாசமும் - ஒரு புரிதல்
4. புனித பிரான்சிஸ் அசிசியார் இன்றைய உலகிற்கு தரும் பாடங்கள்
5. திருச்சபை செய்திகள்

## சுடர் வாசகர் போட்டி - 27

1. தந்தை பியோவின் காயங்களிலிருந்து வரும் நறுமணம் எதை அறிவுத்தும்?
2. 1910ஆம் ஆண்டு ஆகஸ்ட் 26ஆம் நாள் பிறந்த புனிதை யார்?
3. மிக்கேல், கபிரியேல், ரபேல் இத்தூதர்களின் பெயர்களின் பொருள் என்ன?
4. தூய இராபர்ட் பெல்லார்மின் எந்த பல்கலைக் கழகத்தின் முதன்மைப் பேராசியராக பதவி வகித்தார்?
5. ஆண்டவர் அறையப்பட்ட சிலுவை கண்டுபிடிக்கப்பட்டது எந்த ஆண்டு?
6. "மரியா எல்லாம் வல்ல இறைவனின் சொல்லற்கரிய புதுமை" கூறியது யார்?
7. அன்னை தெரேசா பெற்ற மாபெரும் விருதென ஆசிரியர் கூறும் இரண்டு விருதின் பெயரை எழுது?
8. பழங்குடியின மக்களிலிருந்து புனித நிலைக்கு உயர்த்தப்படவிருக்கும் அருட்சகோதரியின் பெயர் என்ன?
9. அருட்தந்தை பிளாசிடோ எந்த கொடிய நோயிலிருந்து தந்தை பியோவின் செபத்தினால் குணமடைந்தார்?
10. இத்தாலியில் "பியோ" என்பதற்கு பொருள் என்ன?
11. "வுல்கேட்" என்ற நூலின் ஆசிரியர் யார்?
12. தூய இராபர்ட் பெல்லார்மின் இறைவனடி சேர்ந்தது எப்போது?
13. வியாகுல அன்னை விழாவை கொண்டாட மரியின் ஊழியர் சபைக்கு வத்திக்கான் எந்த ஆண்டு அனுமதி அளித்தது?
14. இயேசு அறையப்பட்ட சிலுவையை அகழ்வாராய்ச்சி மூலம் தேட புறப்பட்ட பெண்மணி யார்?
15. வழிபாடு செய்யுங்கள் கடவுளுக்கு அருகில் நீங்கள் செல்லலாம், சேவை செய்யுங்கள் கடவுள் உங்கள் அருகில் வருவார். கூறியது யார்?

## செப்டம்பர் - 2016

| தேதி | கிழமை | வாசகம் | நற்செய்தி | திருநாட்கள் |
|---|---|---|---|---|
| 1 | வி | 1கொரி 3:18-23 | லூக் 5:1-11 | |
| 2 | வெ | 1கொரி 4:1-5 | லூக் 5:33-39 | |
| 3 | ச | 1கொரி 4:6-15 | லூக் 6:1-5 | புனித பெரிய கிரகோரி |
| 4 | ஞா | I - சாஞா 9:13-18<br>II - பில 9ஆ-10,12-17 | லூக் 14:25-33 | பொதுக்காலம் 23ம் ஞாயிறு |
| 5 | தி | 1கொரி 5:1-8 | லூக் 6:6-11 | புனித அன்னை தெரேசா |
| 6 | செ | 1கொரி 9:16-19,22-27 | லூக் 6:39-42 | |
| 7 | பு | 1கொரி 7:25-31 | லூக் 6:20-26 | |
| 8 | வி | மீக்கா 5:2-5அ | மத் 1:1-16,18-23 | தூய கன்னி மரியாவின் பிறப்பு |
| 9 | வெ | 1கொரி 6:1-11 | லூக் 6:12-19 | |
| 10 | சு | 1கொரி 10:14-22 | லூக் 6:43-49 | |

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | ஞா | I - விப 32:7-11,13-14<br>II - 1திமொ 1:12-17 | லூக் 15:1-32 | பொதுக்காலம் 24ம் ஞாயிறு |
| 12 | தி | 1கொரி 11:17-26 | லூக் 7:1-10 | |
| 13 | செ | 1கொரி 12:12-14,27-31 | லூக் 7:11-17 | |
| 14 | பு | I - எண் 21:4-9<br>II - பிலி 2:6-11 | யோவா 3:13-17 | திருச்சிலுவையின் மகிமை விழா |
| 15 | வி | 1கொரி 15:1-11 | யோவா 19:25-27 | வியாகுல அன்னை நினைவு |
| 16 | வெ | 1கொரி 15:12-20 | லூக் 8:1-3 | |
| 17 | சு | 1கொரி 15:35-37, 42-49 | லூக் 8:4-15 | புனித ராபர்ட் பெல்லார்மின் |
| 18 | ஞா | I - ஆமோ 8:4-7<br>II - 1திமொ 2:1-8 | லூக் 16:1-13 | பொதுக்காலம் 25ம் ஞாயிறு |
| 19 | தி | நீமொ 3:27-35 | லூக் 8:16-18 | |
| 20 | செ | நீமொ 21:1-6,10-13 | லூக் 19-21 | |
| 21 | பு | எபே 4:1-7,11-13 | மத் 9:9-13 | புனித மத்தேயு |
| 22 | வி | சஉ 1:2-11 | லூக் 9:7-9 | |
| 23 | வெ | சஉ 3:1-11 | லூக் 9:18-22 | புனித பியோ |
| 24 | ச | சஉ11:9-12:8 | லூக் 9:43ஆ-45 | |
| 25 | ஞா | I - ஆமோஸ் 6:1இ3-7<br>II - 1திமொ 6:11-16 | லூக் 16:19-31 | பொதுக்காலம் 26ம் ஞாயிறு |
| 26 | தி | யோபு 1:6-22 | லூக் 9:46-50 | |
| 27 | செ | யோபு 3:1-4அ,11-17,20-23 | லூக் 9:51-56 | புனித வின்செண்ட் தெ பவுல் |
| 28 | பு | யோபு 9:1-12,14-16 | லூக் 9:57-62 | |
| 29 | வி | தானி 7:9-10,13-14 | யோவா 1:47-51 | முப்பெரும் அதிதூதர்கள் விழா |
| 30 | வெ | யோபு 38:1,12-21:40:3-4 | லூக் 10:13-16 | புனித ஜெரோம் |

**அன்னை தெரேசாவின் அருள் முத்துக்கள்**

அருள்பணி. பிரையன் நூலிலிருந்து
மொழிப் பெயர்ப்பு: பணி. அந்தோணி கிறிஸ்டி சச.,

**ஒரு குருவானவரின் வாழ்வில் அவருக்கும், அவரது பணிக்கும், மூவொரு இறைவனுக்கும் உள்ள உறவு என்ன?**

கடவுள் உலகின்மீது அன்பு கொண்டதால் அவரது வாக்கு மனுவுரு எடுத்து நம்மிடையே குடிக்கொண்டார். குருவானவர் இந்த அன்பின் அடையாளமாய் வடிக்காலாய் இருக்கின்றார் என்பதேஉ ண்மை. உயிருள்ள சுடராய், இறையன்பின் சுடரொளியாய் முடிவில்லா அன்பின் எதிர்நோக்காய் வாழ அழைக்கப்படும் குருவானவர் தந்தை, மகன், தூய ஆவியின் ஒன்றிப்பில் தன் வாழ்வு, எண்ணம், செயல்கள் ஆகியவற்றால் இணைந்திருந்தால் மட்டுமே மற்றொரு கிறிஸ்துவாக மக்களுக்கு திகழ முடியும்.

**எளியோர் உருவில் கிறிஸ்துவே நம்மிடையே வாழ்கிறார் என்பதே மறையுண்மை**

சவுல் கிறிஸ்தவர்களை ஒழிக்க தமஸ்கு நகர் சென்று கொண்டிருந்தபோது அவரை தடுத்தாட்கொள்கிறார் இயேசு "சவுலே சவுலே ஏன் என்னை துன்புறுத்துகின்றாய்" என்ற குரலுக்கு "நீர் யார் பேசுவது?" என்று சவுல் கேட்கிறார். தெளிவான குழப்பமற்ற கிறிஸ்துவின் பதிலை கவனியுங்கள்: "நீ துன்புறுத்தும் இயேசு கிறிஸ்துவே நான்" தமஸ்கு நகரில் துன்புறுத்தப்படும் கிறிஸ்தவர்கள் என்று அவர் குறிப்பிடவில்லை. "கிறிஸ்து" என்றே குறிப்பிடுகிறார் இவ்விரண்டிற்கும் வேறுபாடு அதிகமில்லை. "சின்னஞ் சிறியவர்கள் இவர்களுக்கு நீ செய்வது எல்லாம் எனக்கே செய்கின்றாய்" என்றவர் கிறிஸ்து. "நான் பசியாய் இருந்தபோது எனக்கு உணவு கொடுத்தாய்" என்று கூறும் கிறிஸ்து வெறும் வயிற்றுப்பசியை குறிப்பிடவில்லை அன்பிற்கும் அரவணைப்பிற்கும் பாசத்திற்கும் பரிவுக்கும், ஆதரவுக்கும் ஏங்கும் பசியையும் குறிப்பிடுகிறார். "நான் ஆடையின்றி இருந்தேன் என்னை உடுத்தினாய்" என்று கூறும்போது வெறும் உடலை மறைக்கும் துணியை மட்டும் அவர் குறிப்பிடவில்லை. மாறாக மனித மாண்பை அளிக்கும் எல்லாவற்றையும் சேர்த்தே குறிப்பிடுகிறார்.

**நீங்கள் என்னை யாரென்று கூறுகிறீர்கள்? (மத் 16:15)**

**அன்னை தெரேசாவின் பார்வையில்**

இயேசுவே மனுவுருவான வார்த்தை
இயேசுவே வாழ்வுதரும் அப்பம்
இயேசுவே என் பாவங்களுக்காய் சிலுவையில் பலியானவர்
இயேசுவே உலகின் பாவங்களுக்காகவும் எனது பாவங்களுக்காகவும் திருப்பலியில் ஒப்புக் கொடுக்கப்படும் பலி
இயேசுவே அறிவிக்கப்பட வேண்டிய வார்த்தை
இயேசுவே சொல்லப்பட வேண்டிய உண்மை
இயேசுவே நடக்கப்பட வேண்டிய வழி
இயேசுவே ஏற்றப்பட வேண்டிய ஒளி
இயேசுவே வாழப்பட வேண்டியவ ாழ்வு
இயேசுவே அன்பு செய்யப்பட வேண்டிய அன்பு
இயேசுவே பகிரப்பட வேண்டிய மகிழ்ச்சி
இயேசுவே ஒப்புக்கொடுக்கப்பட வேண்டிய பலி
இயேசுவே அளிக்கப்பட வேண்டிய அமைதி
இயேசுவே உண்ணப்பட வேண்டிய உணவு
இயேசுவே உணவளிக்கப்பட வேண்டிய பசியுள்ளவர்
இயேசுவே தாகம் தீர்க்கப்ட வேண்டிய தாகமுள்ளவர்
இயேசுவே உடுத்தப்பட வேண்டிய ஆடையற்றவர்
இயேசுவே தஞ்சமளிக்கப்பட வேண்டிய இல்லமற்றவர்
இயேசுவே குணமளிக்கப்பட வேண்டிய நோயுற்றவர்
இயேசுவே அன்பு செய்யப்பட வேண்டிய தனிமையுள்ளவர்
இயேசுவே அரவணைக்கப்பட வேண்டிய நிராகரிக்கப்பட்டவர்
இயேசுவே சுத்தம் செய்யப்பட வேண்டிய தொழுநோயாளர்
இயேசுவே இன்முகம் தேடும் யாசகர்
இயேசுவே கவனத்திற்காக ஏங்கும் குடிகாரர்

இயேசுவே பாதுகாக்கப்பட வேண்டிய மூளைவளர்ச்சி குன்றியவர்
இயேசுவே அணைக்கப்பட வேண்டிய ஆதரவற்ற சிறுகுழந்தை
இயேசுவே வழிநடத்தப்பட வேண்டிய பார்வையற்றவர்
இயேசுவே குரல்கொடுக்கப்பட வேண்டிய பேச்சற்றவர்
இயேசுவே உடன் நடக்க வேண்டிய முடமானவர்
இயேசுவே நட்புக்காக ஏங்கும் போதை பழக்கமுள்ளவர்
இயேசுவே காப்பாற்றப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டிய விபச்சாரத்தில் தள்ளப்பட்டுள்ள பெண்
இயேசுவே சந்திக்கப்பட வேண்டிய சிறைக் கைதி
இயேசுவே கவனிக்கப்பட வேண்டிய வயது முதிர்ந்தவர்

எனக்கு, இயேசுவே என் கடவுள்
இயேசுவே என் மணவாளன்
இயேசுவே என் வாழ்வு
இயேசுவே எனது ஒரே காதல்
இயேசுவே எனக்கு எல்லாம்.

**புனித அன்னை தெரேசாவை நோக்கி செபம்**

புனித அன்னை தெரேசாவே,
சிலுவையில் தாகமாயிருந்த இயேசுவின்
அன்பு உம் உள்ளத்தில் தீயாய்
கொழுந்துவிட்டெறிந்ததால், அவர்
அன்பின் சுடரொளியாய் மாறியவர் நீர்.
இவ்வன்பின் ஊற்றாம் இயேசுவின்
இதயத்திடமிருந்து நான் வேண்டும்
இவ்விண்ணப்பத்தை பெற்றுத்தருமாறு மன்றாடுகிறேன்.

(உங்கள் விண்ணப்பத்தை நினைவு கூறவும்)
இயேசுவின் அன்பு என்னையும் ஊடுருவி என் வாழ்வையும் முழுமையாய் ஆட்கொண்டு, உம்மைப் போன்று அவரது ஒளியையும் அன்பையும் எல்லோருக்கும் பகிர்ந்தளிக்க செய்வதாக.

மரியாளின் மாசற்ற உள்ளமே எமது மகிழ்ச்சியின் ஊற்றே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
கொல்கத்தாவின் புனித அன்னை தெரேசாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.